*Kalanjiyam International Journal of Tamil Studies*
*An international, peer-reviewed quarterly academic research journal*
**ISSN: 2456-5148 (Online)**
**www.ngmtamil.in**

**களஞ்சியம் – சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Quarterly Peer-Reviewed Open Access Crossref Google Scholar
SJIF Impact Factor 4.0 Multidisciplinary International
DOI: https://doi.org/10.63300/kijts06022026

**Vol. 6 No. 02, August 2026, p136-145** | Available online at: www.tamilmanam.in
*Original Research Paper*

# புறநானூறு முன்வைக்கும் நிலையாமை தத்துவமும் அதனால் தனிமணித – சமுதாய சூழலில் ஏற்பட்ட தாக்கமும்

## Life's Ephemeral Nature and Its Impact On Individuals and Society A Behavioral Psychology Perspective in Purananooru

**டி. கே. இரமேஷ்,**
முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, கற்பகம் உயர்கல்விக்கழகம்,
கோயம்புத்தூர் – 641021
**T K Ramesh*,**
*Ph. D., Research Scholar, Department of Tamil, Karpagam Academy of Higher Education, Coimbatore – 641021.*
*Email: alignandequip@gmail.com, Phone/Mobile +919845694194*

**முனைவர் ப. தமிழரசி,**
மூத்த பேராசிரியர், தமிழ்த்துறை, கற்பகம் உயர்கல்விக்கழகம்,
கோயம்புத்தூர் – 641021
**Dr. (Mrs.) P. Thamilarasi,**
*Sr. Professor, Department of Tamil, Karpagam Academy of Higher Education*
*Coimbatore - 641021.*

*Article history*
Received: 31-07-2026
Revised: 31-07-2026
Accepted: 01-08-2026
**Published: 01-08-2026**

*Corresponding Author Email:
*alignandequip@gmail.com*
Tel: *+919845694194*

**Abstract:** While modern behavioral psychology was formalized by Western thinkers starting in the 18th century, its core concepts were already deeply integrated into the daily life of ancient Tamil society. This early psychological understanding is evidenced by Sangam-era literature, specifically Purananooru (dating between 200 BC and 200 AD), which alongside foundational works like Tolkappiyam, documents a highly evolved civilization contemporaneous with the Roman Empire and Han Dynasty. Rather than just serving as historical artifacts, these literary texts reveal a sophisticated society built on strict ethics, robust educational systems, and self-governing human values. By anchoring their societal harmony in practical virtues—most notably the profound acceptance of life's impermanence—the ancient Tamils demonstrated an advanced application of behavioral concepts centuries before they were formally theorized in the West.

**Keywords:** *Fear, Anxiety, Impermanance, Humility, Let-Go, Gratitude, Mindfulness, Temparence, Hoarding, Aggrandisement, Unforgiving.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution
(CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

**நோக்கமும் அடிப்படையும்**

எட்டுத்தொகை நூல்களில், புறம் பாடும் நூல்களில் ஒன்றான, புறநானூற்றின் காலம் கி.மு. 200 முதல் கி.பி. 200 வரையிலானதாக இருக்கலாம் என ஆராய்ச்சியாளர்கள் நிர்ணயிக்கிறார்கள். புறநானூறுப் பாடல்களில் குறிப்பிடப்படும், மௌரிய மற்றும் நந்த பேரரசுகள், தென் நாட்டை ஆண்ட மன்னர்கள் கரிகாற் சோழன், பாண்டியன் நெடுஞ்செழியன், சேரன் செங்குட்டுவன் ஆகியோரினைப் பற்றியப் பாடல்கள், ஆதாரங்களாகக் கொள்ளப்படுகின்றன! இச்சமக்காலத்தே ஐரோப்பாவில் ரோமப் பேரரசும் செல்டிக் இனக்குழுக்களும், சீனாவில் ஹான் வம்சமும், மத்திய கிழக்கில் பார்த்தியர்களும், உலகில் செழித்து விளங்கிய நாகரீகங்களாகும்.

தமிழில் கண்டுபிடிக்கப்பட்டக் கல்வெட்டுகள், கிடைக்கப்பெற்ற செப்பேடுகள், ஓலைச்சுவடிகள், மட்பாண்டங்கள், கற்கோயில்கள் பிற கட்டிடக் கலைச் சான்றுகள் ஆகிய இவைத் தவிர, அக்காலச் சமூகத்தைப் பற்றி அறிய இலக்கியம் ஒரு முக்கிய ஆதாரமாக விளங்குகிறது.

இடைச்சங்க காலத்தினதாகக் கருதப்படும், புறநானூறு, தமிழின் - தமிழர்களின் ஆரம்பக் கவிதை மரபை பிரதிபலிப்பதாக அமைகிறது எனலாம். இடைச்சங்கத்தின் மாபெரும் தமிழ் இலக்கியமாக **தொல்காப்பியம்** போற்றப்படுகிறது. இந்நூல், எழுத்து இலக்கணம், சொல் இலக்கணம், செய்யுள் மரபு, தமிழ் மக்களிடையே புழங்கியச் சொற்கள், வாழ்க்கை முறை, போர் காலக் கலாசாரங்கள், விலங்குகள், தாவரங்கள், இயற்கை நிலைகள், போன்ற பல விவரங்களை தெளிவாகவும் விவரமாகவும் எடுத்துரைக்கிறது.

**தொல்காப்பியம்** மற்றும் பிற எட்டுத்தொகை நூல்கள் பதிவிடும் செய்திகள் மூலம், அக்காலத்தே நிலவிய, உயர்ந்த சமூக நிலைப்பாடுகள், மதிப்புகள், சட்ட திட்டங்கள், ஒழுக்கநெறிகள், பழக்க வழக்கங்கள், பண்பாட்டு மரபுகள், கற்றல்–பகிர்தல்–வெளிப்படுத்தல்–மதிப்பீடு செய்தல் ஆகியவற்றை உள்ளடக்கிய கல்விமுறைகள், போன்ற இவையனைத்தும் ஒரு முதிர்ந்த முன்னேறிய சமூகத்தையே பறைச்சாற்றுகிறது.

சமூகத்தின் தரம் வளர்ச்சி மற்றும் முதிர்ச்சிக்கு முக்கிய பங்குதாரர்களாக அமைபவர்கள் பொதுமக்கள், அரசர்கள், அமைச்சர்கள், வீரர்கள், புலவர்கள், கலைஞர்கள், பல்வேறு தொழில் புரிபவர்கள்.

இம்மாந்தர்களின் சுய ஒழுக்கம் மற்றும் மனிதநேய மதிப்புகள், நல்லொழுக்கங்கள், நிர்வாகத் தரநிலைகள், வாழ்வியல் மதிப்புகள்;, இரவலரை ஆதரிக்கும் வள்ளல்களின் பரிவு, உயர்ந்த போர்நெறிகள், வீரர்களின் கடமையுணர்வு, மன்னர்களின் சான்றான்மை ஆகியவையாகும். இத்தகைய உயர் நடத்தைகளுக்கு அடிப்படையாக விளங்கும் நம்பிக்கைகளில் முக்கியமானது

***"வாழ்க்கையின் நிலையாமை"*** தன்மையாகும். இதனை போற்றும், போதிக்கும், பேணி கடைப்பிடிக்கும் சமூகம், உயர்ந்த கலாசாரத்தையும், சான்றோர்களையும்,

நற்குடிமக்களையும் பெற்று, எல்லா துறைகளிலும் நுண்கலைகளிலும் உயர்ந்து, உறுபசியும்

ஒவ்வாப் பிணியும் செறுபகையும் இன்றி செழித்திருக்கும்.

அக்கால நாகரிகம் எவ்வாறு செழிப்பான, ஒருங்கிணைந்த, முதிர்ந்த, பரஸ்பரம் வலுப்படுத்தும் அமைப்பாக வளர்ச்சி பெற்றது என்பதை புரிந்துகொள்ள, சங்க இலக்கியங்கள், பெரிதும் உதவுகின்றன. இக்கட்டுரை, அவ்வாறான மதிப்புகள், நற்குணங்கள், ஒழுக்கநெறிகள், தரநிலைகள், நடைமுறைகள் மற்றும் மனித மனப்பாங்குகளின் மாதிரிகளை ஆராய்ந்து அவற்றை முன்வைக்கும் முயற்சியாகும்.

**குறிப்புச் சொற்கள்:** *பயம், பதற்றம், நிலையாமை, பணிவு, பற்றின்மை, நன்றியுணர்வு, விழிப்புணர்வு, அளவோடு இருத்தல், பதுக்கல், அளவுக்கதிகமாக சேர்த்துவைத்தல், தற்பெருமை, தன்னடக்கம், மன்னிக்காமை*

---

நிலையாமை தத்துவத்தை உணர்த்தும் புறநானூறு பாடல்கள் **356** முதல் **367** வரையிலான பாடல்களாகும்:

**"களரி பரந்து, கள்ளி போகி,...."** **(புறம். 356)**

தாயங்கண்ணனார் (கதையங்கண்ணனார் என்று ஔவை துரைசாமி பிள்ளை குறிப்பிடுகிறார்) எனும் இச்சான்றோர், சுடுகாட்டைப் பொருளாகக் கொண்டு உயிர்வாழ்க்கையின் நிலையாமை இயல்பை எடுத்துரைக்கிறார்.

சுடுகாட்டின் தன்மையை சொல்லும்போது "அதன் அச்சம்தரும் தோற்றம், உயிரோடு இருப்பவர் இறக்க, இறந்தபின் சாம்பலாக, அந்தச்சாம்பலின் சூட்டை இறந்தவரை நேசிப்பவரின் கண்ணீர் அவிக்க.. இது எப்போதும் நடந்துகொண்டே இருக்கிறது. இச்சுடுகாடு எத்தகையவருக்கும் தானே முடிவிடமாய் விளங்குவது மட்டுமல்லாமல், எல்லாரின் முதுகையும் (புறத்தைக்) காண்கிறது. இதன் புறத்தைக் காண்பார் இல்லை. எல்லாரும் வீய, தான்மட்டும் நிற்கும் தன்மையுடையது"

"வாழ்வு நிலைப்பதில்லை; ஆனால் இறப்பு நிச்சயம்" என்பதை எடுத்துக்காட்டும் விதமாக இருக்கிறது சுடுகாடு. ஆதலால், நிச்சயம் இல்லா வாழ்வில், அறம் பிறழாமல், உயர்நெறி கடைப்பிடித்து வாழ்தல் இன்றியமையாததாகும்.

**"குன்று தலைமணந்த மலைபிணித்து யாத்த மண்...."** **(புறம். 357)**

இப்பாடலை இயற்றிய பிரமனார் பற்றி கூறும் ஔவை துரைசாமி பிள்ளையவர்கள், “இவர் துறவினகண் நின்று அறத்தை வலியுறுத்துவது இன்பம் தருவதாகும்” என்கிறார்.

“மூவேந்தர்கள் ஒருவர் நாட்டை மற்றவர் கவர்வதும், கவர்ந்த நாட்டை மக்களின் நன்மை கருதாமல், தன் போக்கில் பொதுமையின்றி ஆள்வதுமாய் இருந்தனர். அத்தகைய மன்னர்களுக்கு அவர்கள் ஈட்டிய செல்வமும் அதிகாரமும் அவர் இறந்தபிறகு அவரொடு வரவில்லை. எத்தகையவர் ஆதலும் அவர் செய்த அறமே அவரொடு விண்னுலகதிற்கு துணைவரும். அறவிணை செய்யவில்லை என்றால், உயிர்போகும்போது இக்கரையிலிருந்து அக்கரைக்கு செல்வது இயலாது. அறவிணையே தெப்பம்போல் உதவும்”.

இதையே எடுத்துரைகின்றது திருவள்ளுவமும்

*“அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்*

*பிறவாழி நீந்தல் அரிது”* *(குறள். 8)*

அறம் சார்ந்த வாழ்வே சிறந்தது என்பதை அதிகாரம் செலுத்தும் மன்னருக்கு வலியுறுத்தி, ஏனையவரின் மனநிலையையும் அறம் சார்ந்த விணையாற்ற வைக்கிறார் புலவர்.

**“பருதி சூழ்ந்த இப்பயம் கெழ மா நிலம்....”** **(புறம். 358)**

வான்மீகியார் இப்பாடலில் தவத்திற்கும் உலக வாழ்க்கைக்கும் இடையே எதை தேர்ந்தெடுப்பது என்பதில் மனித மனத்தில் நடக்கும் போராட்டத்தையும், அப்போராட்டத்தில் அவர்கள் படும் உளைச்சலையும் காட்டி, எது சிறந்தது என்பதையும் கூறுகிறார்.

“இந்த உலகம் சுற்றிவரும் சூரியனினால் கிடைக்கும் பலன் ஆனது, ஒரெ நாளில் பலருக்கு கிடைக்கபெறும், இந்த உலக வாழ்க்கையை ஆராய்ந்தால், தவத்திற்கு இவ்வையகம் ஒரு கடுகளவு கூட நேர்படாதாம். இருந்தும் பலர் இல்வாழ்க்கையினை விடாமல் பற்றிக்கொள்கின்றனர். அத்தகையவரிடம் செல்வம் தரும் திருமகள் நீங்காள். அவ்வாறு அவள் பற்றியப்பின் நீங்கிவிட்டால், இல்வாழ்க்கையின்கண் பற்றுக்கொண்டவர் நீங்க முடியாது வருந்துவர்”.

***இயல்பாகும் நோன்பிற்கொன் றின்மை உடைமை***

***மயலாகும் மற்றும் பெயர்த்து*** ***(குறள். 344)***

வள்ளுவர் ***“பற்று”*** என்பதை ‘***ஒர் பொருள் தவிர்க்க இயலாதது எனக்கருதி அதனை பெற ஆசைப்படுதலும் அதன் இழப்பை தவிர்க்க நினைப்பதும்”*** என்கிறார். இல்வாழ்க்கைக்கு செல்வம் இன்றியமையாத ஒன்று எனக் கருதியபின் அதனை இழக்க விரும்பாமல், அதனைப் பற்றி இருப்பது, துறவறத்தைப்பற்ற பெருந்தடையாக அமையும்.

இவ்விதமே உறவு, அன்பு, இன்பம், பதவி, அதிகாரம், மண், பொன் ஆகியவை அனைத்தும் நம்மை பற்றுவிடற்கு தடையாய் அமையும். பற்று ஓர் மயக்கத்தையும், மயக்கம் அறம் பிறழ ஓர் வாய்ப்பையும் கொடுப்பதால், நிலையாமையை புரிந்து கொள்வதே ஓர் மனிதனை பேரின்பத்தை அடையும் வழியில் நடத்திச்செல்லும்.

**“பாறுபடப் பறைந்த பல் மாறு மருங்கின்,.....”** **(புறம். 359)**

அந்துவன் கீரன் என்னும் தலைவன், சான்றொர் சொல் கேட்டு பெரும் புகழும் செல்வமும் ஈட்டி விளங்கினான். அவன் மனமோ பொருள் ஈட்டுவதிலேயே மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தது. அதனை மாற்ற பல சான்றோர் முயன்றனர். ஆனால், அவனை நெருங்கி தெளிவு கொடுக்க, **காவிட்டனார்** என்ற சான்றோர் மட்டுமே முடிந்தது ஆகையால், அவர் இப்பாடல் மூலம் கீரனுக்கு எடுத்துச்சொல்ல தலைப்பட்டார்,

“வேந்தர்கள் எத்தனை வெற்றிக் கண்டாலும், அச்சமும் அருவருப்பும் தரும் சுடுகாட்டை அடைந்தே தீருவார்கள். உலகில் புகழும் தொடரும் பழியும் தொடரும். அதனால், நீ நீங்கா புகழ் தரும் செய்கைகளான, முகம் கோணாமல் கொடுத்தலும், இரப்போர்க்கு யானையும், குதிரைகளையும், அலங்காரத் தேர்களையும், பிறவற்றையும் கொடுத்தலும் செய்வாயாக. அவ்வாறு செய்யின், நீ இறந்த பின்னும் உன் புகழ் நிலைக்கும்”

நான், எனது என்றென்னாமல் ஈவது நீங்காப் புகழை இம்மையிலும் மறுமையிலும் கொடுக்கும் என்பது, நிலையாமை தத்துவத்தினை புரிதற்பாற் செய்யும் செய்கையாகும்.

**“பெரிது ஆராச் சிறு சினத்தர், ........”** **(புறம். 360)**

தந்துமாறன் என்போன் ஆணைவழியாண்ட தலைவர்களுள் ஒருவன் (ஔவை துரைசாமி பிள்ளை).

இவனை சங்கவருணர் என்னும் சான்றோர் கண்டு இவ்வறிவுரையை கூறினார்.

“கோபம் இன்றி, உணவும் பேச்சும் குறைத்து, சுவையான உணவை அடுத்தவர்க்கு ஈந்து மகிழ்பவரும், இனியமொழியும், நற்பண்புகளும், நற்செய்கையால் பலருக்கு பயன்பட இவ்வுலகில் வாழ்ந்தவர்கள் சிலரே. கள்ளிச்செடி படர்ந்த சுடுகாட்டில் உடல் கருகி சாம்பலாவதைக் கண்டும், பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பாதவர்கள் இருக்கும் இவ்வுலகில், நீயும் அவ்வாறு இல்லாமல், ஒழுக்கம் குன்றாமல், இரப்போர்க்கு அவர்கள் துன்பம் தீர கொடுப்பாயாக. இக்கொடைத் தன்மையே நீங்கா புகழைத் தரவல்லது”, என்று இப்பாடல் மூலம் எடுத்துரைக்கிறார் புலவர்.

**“கார் எதிர் உருமின் உரறி, கல்லென, ...”** **(புறம். 361)**

இப்பாடலின் அச்சுபிரதியில் ஆசிரியர் பெயர் காணவில்லை, ஆனால், கையெழுத்துப்படியில் கயமானர் என்று இருப்பதாக, உரையாசிரியர் ஔவை துரைசாமி பிள்ளை குறிப்பிடுகிறார். பாடலாசிரியர், இதில் கூற்றவனைப் பார்த்து, தன் தலைவனைப்பற்றி கூறுவது போல் பாடி, அத்தலைவனுக்கு, நிலையாமைப் பற்றி எடுத்துரைக்கிறார்.

“கூற்றுவனே! என் தலைவன் உன் வரவுக்கு அஞ்சுபவன் அல்ல! ஏன் என்றால், அவன்

- கல்விக் கேள்விகளில் தேர்ந்த அந்தணர்க்கு பொன் அணிகளை நீர் வார்த்துத் தந்துள்ளான்
- தாயினும் சாலப்பரிந்து பலருக்கு வேண்டுவன கொடுத்துள்ளான்
- தன்னைப் பாடியவர்க்கு யானைகளையும், தன்னை சரணடைந்தவர்க்கு தேர்களையும் கொடுத்துள்ளான்
- பாணன் பாணினிக்கு பொன் மாலைகளை தந்துள்ளான்
- இகழ்ச்சி இல்லாதவன்
- உயிர் மற்றும் செல்வத்தின் நிலையாமையை அறிந்தவன்

என்று கூற்றுவனுக்கு கூறுவதுபோல், தலைவனுக்கு நிலையாமைப் பற்றி எடுத்துரைக்கிறார் புலவர்.

**ஞாயிற் றன்ன வாய்மணி மிடைந்த...” (புறம். 362)**

பாடப்பெற்றத் தலைவனும் அவன் வீரர்களும், போர் வேட்கை மிகக்கொண்டு, அதற்கேற்ப மெய்வலி பெருக்கி ஒழுகுவது கண்ட அந்தணர்கள், இதற்கு காரணம் அறியவேண்டி சிறுவெண்டேரையார் என்னும் சான்றோர் முன் வந்து நிற்க, அவர்களுக்கு தெளிவு ஏற்படுத்த இப்பாடலின் கருத்தை கூறுகிறார்.

“இப்போர் பறையை கேளுங்கள். இது அறம் குறித்தன்று, அதனால் இதை உங்கள் நான்மறைகளில் காணபெறாதது. இது பொருள் குறித்த போர் அன்று, அதனால் அறம் கூறும் நூல்களில் குறிக்கப்படுவதன்று. பொன் பொருள் குறித்த மயக்கம் ஏதும் இன்றி, நீர்வளம் மிகுந்த மருதநில ஊர்களையெல்லாம் பிறர்க்கு கொடுத்து, பசித்தவர்களுக்கு மிகுதியாக சோறு கொடுத்து, பரிசில் கேட்டு வருபவர்களுக்கு நல்ல அணிகளைக் கொடுத்தான் தலைவன். அகன்ற சுடுகாட்டில், அந்த இடத்தின் தன்மை அறியாமல் சுற்றத்தார் நிறைந்திருப்பதால் அவ்விடம் நமக்கு இல்லை என்று நகர்ந்து, இந்த நிலவுலகம் சிறியதாகையால் இங்கும் இடம் இல்லை என உணர்ந்து, வீரத்தால் சிறந்தோர் புகழுலகிற்கு தங்கள் ஊண் உடம்போடு செல்வதால், தாமும் அவ்வாறே செல்லவே இந்த போர் ஆகும்”.

மன்னன் நிலையாமையை உணர்ந்ததினால், இந்த உயர்ந்த விணை செய்யத் தலைப்பட்டான், என்பது பாடலின் உட்கருத்து.

**“இருங் கடல் உடுத்த இப் பெருங் கண் மா நிலம்...” (புறம்.363)**

ஐயாதிச் சிறுவெண்டேரையார் என்னும் சான்றோர், மன்னனை நிலையாமை உணர்ந்து நீங்கா புகழ்பெற இப்பாடற் கருத்தை அறிவுறுத்துகிறார்.

"இவ்வுலகில், ஓர் இலை அளவுகூட இடத்தினை பிறர்க்கு அளிக்காமல் தாமே ஆண்ட மன்னர்கள் பலர் இருந்தனர். ஆனால் முடிவில் தம் நாட்டைப் பிறர் கொள்ள, அவர் இறந்தனர். அதனால், எப்போதும் இறப்பில்லாமல் உயிருடன் உள்ள உடல் கிடையாது. இறத்தல் உண்மை. அத்தகைய இறுதிநிலை வருமுன், உன் உடலும் கள்ளிகாடான சுடுகாட்டில் இட்டு, தீக்கிரையாக்கி, உப்பில்லாமல் வெந்த சோறை உனக்கு படைக்கும் நாள் வருமுன், உலகத்தின் மேல் ஆசையைத் துறந்து நல்வினையாகியத் தவத்தை செய்வாய்".

இறத்தல் உண்மை. உனது எனநினைக்கும் எதுவும் உனக்கு பிறகு பிறர்க்கே. ஆதலால், இருக்கும் போதே, ஆசையைத் துறந்து, நல்வினைகளை செய்வதே உயர்நெறியாகும், என்பதே இப்பாடல் உணர்த்தும் கருத்து.

**"வாடா மாலை பாடினி அணிய…" (புறம். 364)**

வாழ்க்கையின் நிலையின்மையை எடுத்துரைக்கும் இப்பாடலின் பொருளாவது:

"வீரப்போர் செய்யும் வேந்தே! பாணற்கு தாமரையும் விறலிக்கு பொன்மாலையும், மற்றையவர் சூழ, கரிய ஆட்டின் இறைச்சியை நன்கு சுவையாகச் சமைத்து, கேட்பவர்கெல்லாம் கொடுத்து இப்போதே அந்த மகிழ்ச்சியை அடைந்துவிடு. முதிர்ந்த வேர்களையுடைய பழைய மரத்தின் பொந்துகளிலிருந்து கூகைக்கோழி கூவும் இடுகாட்டினை அடையும்போது இவ்வாறு மகிழ முடியாது"

நிலைக்கும் தன்மையற்ற இவ்வாழ்வில் நன்வினை செய்து, நல்லின்பம் துய்க்க காலம் கடத்தாமல் இருக்கவேண்டிய அவசியத்தை, கூகைக்கோழியார் இப்பாடல் மூலம் தலைவனுக்கு எடுத்துரைக்கிறார்.

**"மயங்கு இருங் கருவிய விசும்பு மகன் ஆக…." (புறம். 365)**

காஞ்சி பாடிய புலவருள், நிலையாமை உணர்வால் தவம்பூண்டு வாழ்ந்த, மார்க்கண்டேயனார், இப்பாடலில் நிலையாமை தத்துவத்தை நிலமகள்மேல் ஏற்றிப்பாடியுள்ளார்.

"மழையும் இடியும் கொண்ட ஆகாயம் முகமாகவும், சூரியனையும் சந்திரனையும் கண்களாகக் கொண்ட நிலமகள், தேர்ச்சக்கரத்தை உருட்டி போரில் பகைவரை வீழ்த்திய முன்னோர்கள் பலர் மறைந்தும் தான் மட்டும், விலைமகள் போல பலர் புகழுமாறு, மறையாது உள்ளேனே?" என நிலமகள் அழுது புலம்புவதாக அமைத்துப் பாடியுள்ளார்.

ஆதிபகவன் படைத்த நிலமகளே நிலையாமை கூறிப் புலம்பும்போது, மானிடர்களாகிய நாம் நிலையாமியை உணராமல், நான் – எனது என பற்றறுக்காமல், நம்முன்னோர்களெல்லாம் இடுகாடு சென்றதைக் கண்ணுற்றும், நல்வினை செய்யாமல் இருப்பது மடமை என்பதே இப்பாடலின் உட்கருத்தாகும்.க்

**“விழுக் கடிப்பு அறைந்த முழுக் குரல் முரசம்….”** **(புறம்.366)**

மன்னனுக்கு நிலையாமை தத்துவத்தை கோதமனார் இப்பாடல் மூலம் எடுத்துரைக்கிறார்.

“உலகம் முழுவதும் தன் ஓரு குடையின் கீழ் ஆண்ட பெருமையுடைய வேந்தரும், தன் புகழை நிறுவித் தாம் சென்று மறைந்தனர். ஆகையால், யாரும் நிலைக்காத இவ்வுலகத்தில், யான் உனக்கு ஒன்றை கூறுகிறேன் கேட்ப்பாயாக! உன் வலிமையை யாரும் அறியாவகையிலும், பிறர் கூறுவதில் மெய்ப்பொருள் கண்டும், பகலில் ஆள்வினைக்கு உதவியும், இரவில் மறுநாள் செய்யப்போவதை ஆராய்ந்து வினைமுடிக்க யோசிப்பாயாக. அழகான பெண்கள் மதுஊற்றி கொடுக்க அருந்துவாயாக! ஆட்டிறைச்சியை நன்கு சமைத்து மற்றவர்களுடன் பகிர்ந்து உண்டு மகிழ்வாயாக! நீர்நிலைக் கரையில் அடைத்து நிறுத்தப்பட்டிருக்கும் ஆடுகள் போல இறப்பது உறுதி! பொய்யல்ல!”

வாழ்க்கை நிலையானதல்ல என்பதால், வலிமை வாய்ந்த மன்னனே ஆனாலும், நல்வினச் செய்வன செய்து, நுகர்வன நுகர்ந்து புகழ் நிறுவி, மேன்மையான வாழ்க்கை வாழவேண்டும் என்பதே உட்கருத்து!

**“நாகத்து அன்ன பாகுஆர் மண்டிலம்….”** **(புறம். 367)**

சேரமான் மாவண்கோவும், பாண்டியன் கானப்பேர் தந்த பெருவழுதியும், சோழன் இராசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் ஒரு காலத்தே தமிழகத்தை, தம்முட் பகைநீக்கி, பொதுமையுடன் ஒற்றுமையுடன் ஆண்டு வந்தார்கள்! அதனால், அக்காலச்சான்றோர்கள், இம்மூவரும் ஒரு சேரக் கூடியிருப்பதைக் காணும் போதெல்லாம், ஒன்றிய வாழ்வின் நலத்தை எடுத்தோதிச் சிறப்பிப்பர்.

அவ்வாறே ஔவைப் பிராட்டியும் மூவேந்தர் ஒருங்கிருப்பக் கண்டு இப்பாடற் கருத்தை எடுத்துரைக்கிறார்.

“இந்நிலவுலகம் வேந்தர்க்குரித்தாயினும், அவர் காலத்திற்கு பிறகு உலகம் உடன் போவதில்லை. மற்றவர்க்கும் அவ்வாறே. அதனால், இருக்கும்போதே, அரசினை அறநெறியில் செலுத்திம் இரவலர்க்கு வழங்கி, இன்பமாக வாழ்வீர்களாக! நீங்கள் செய்த நல்வினையே உங்கள் இறுதிக்காலத்தில் உயிர்துணயாகும். யான் அறிந்த அளவு இதுவே! நீவிர் பல காலம் வாழ்வீர்களாக!”

நம்காலத்திற்கு பிறகு நமது என்று நாம் செய்த நல்வினையைத் தவிர எதுவும் நமக்கு துணைவராது ஆகையால், மக்களும் முடிவேந்தரும், இதனை அறிந்து, உணர்ந்து வாழ்க்கையை நடத்திச்செல்லுதல் நன்று, என்பதாம் உட்கருத்து.

**முடிவுரை:**

தனிமனித உறவுகளின் நல்லிணக்கம், சமூக நல்லிணக்கம், அரசாளும் மன்னர்களின் செம்மையான ஆட்சி, இவை அனைத்திற்கும் அடிப்படையாக அமைவது, தனிமனிதனின் மனமுதிர்ச்சியும், மன அமைதியும், மனக் கட்டுப்பாடும், அறம் சார்ந்த சிந்தனைகளும் செயல்களுமேயாம். இவ்வடிப்படை மனநிலை அமைய, உயர் கொள்கைகளின் புரிதலும், தாக்கமும், அவற்றைச் சார்ந்த நல்லொழுக்கமும் நல்வினையும் ஆகும்.

அற இலக்கியங்கள் (பதினெண்கீழ்க்கணக்கு), வாழ்க்கை உயர, உன்னதம் பெற அறம் போதிக்கின்றன. இவ்விலக்கியங்கள் பெரிதும் களபிரர் காலத்தில் படைக்கப்பட்டன எனலாம்.

இக்களபிரர் காலத்திற்கு சற்றேரகுறைய 400 ஆண்டுக்ளுக்கு முன்னதாக அமைந்த எட்டுத்தொகை தொகுப்புகளில் ஒன்றான புறநானூற்றில் அறம் என்பது தனி இலக்கியமாக இல்லாமல், வாழ்க்கையோடு இயைந்த ஓர் அங்கமாக விளங்கியிருக்கின்றதைக் மேற்கூறிய 12 புறநானூற்றுப் பாடல்களில் காணலாம். வாழ்வின் நிலையற்ற தன்மை என்பது புரிந்துகொள்ளப்பட்டு, உணரப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டு, வளர்க்கப்பட்டு, கற்பிக்கப்பட்டு மற்றும் நடைமுறைப்படுத்தப்பட்டிருப்பதை நம்மால் புறநானூற்றுப் பாடல்களில் காண முடிகிறது.

ஏன் சங்கச் சமூகம் தமிழையும் தமிழ் சான்றோர்களையும் பெரிதும் மதித்து அவர்கள் அறிவுரைப்படி நடந்து கொண்டன எனத் தோன்றினால், அதற்கு மறுமொழி நம் தமிழ் மொழியானது தெய்வமொழி! என்றும் நிலைத்திருக்கும் மொழி! அதனால் அம்மொழியில் செம்மைப் பெற்றச் சான்றோரின் வாக்கு தெய்வத்தின் வாக்காக கருதப்பட்டது எனலாம்.

“**வரப்பு உயர நீர் உயரும்..**” என்பதற்கேற்ப, இப்பாடல்கள் அனைத்தும் முடிமன்னர்களுக்கே உரைக்கப்பட்டிருப்பதைக் காணும் பொழுது, நாட்டின் முதல் குடிமகன், வாழ்வின் நிலையாமை தன்மையை புரிந்துகொண்டு அதன்படி வாழ்ந்தானேயானால், நாடும் மக்களும் செவ்வனே வாழ்வர், என்பதை புரிந்துகொண்ட சான்றோர் வாழ்ந்திருப்பது அறிய முடிகிறது.

அத்தகைய தமிழ் வளர்த்த சான்றோர்கள் வாழ்வின் நிலையாமையை எடுத்துரைத்தபோது, புறநானூற்றுச் சமூகம் அதை மனதார தழுவிக் கொண்டது எனலாம்.

வாழ்வு நிலையானது என்று கருதும்போது அது பதற்றத்திற்கும், மேலோட்டமான அனுபவங்கள் மற்றும் பொருட்களுக்கு முன்னுரிமை அளிப்பதற்கும் வழிவகுக்கும் என்பதை அச்சமூகம் உணர்ந்திருந்தது. இத்தகைய மனநிலை மனித நடத்தையை பின்வருமாறு வடிவமைக்கிறது:

- பெருமை, பேராசை, காமம், பொறாமை, பெருந்தீனி, கோபம் மற்றும் சோம்பல் ஆகிய ஏழு பெரும் தீமைகளை (seven deadly sins) பற்றிக்கொண்டிருத்தல்
- சொந்தமாக்கிக்கொள்ளக்கூடிய அனைத்தையும் பெரிதுபடுத்தி மதித்தல்
- உலகை வெல்ல முயலுதல்
- செல்வம், சொத்து போன்ற அனைத்துப் பொருட்களையும் சேர்த்து வைக்கும் முயற்சியில் ஈடுபடுதல்
- மன்னிக்காத குணம் மற்றும் உபரியாக உள்ளவற்றைப் பகிர்ந்துகொள்ளாமை

இந்த வாழ்க்கை முறையை விரும்பாத அச்சமூகம், வாழ்வின் நிலையற்ற தன்மையை உணர்ந்து நடைமுறைப்படுத்தியது. இது ஆழ்ந்த விழிப்புணர்வை உருவாக்கி, மனித நடத்தையை பின்வரும் நற்பண்புகளை நோக்கி வடிவமைத்தது. அவையே,

- குறிக்கோள் சார்ந்த செயல்பாட்டினை செயல்படுத்தினர்
- உறவுகளை மதித்தனர்
- தாழ்மை, அன்பு, பொறுமை, விடாமுயற்சி, தாராள மனப்பான்மை, நிதானம், கற்புநெறி, கருணை, பற்றின்மை, நன்றியுணர்வு போன்ற உயர்ந்த பண்புகளை கொண்டு விளங்கினர்
- மனம், உடல், உணர்வுகள் மற்றும் நுகர்வு ஆகியவற்றில் சமநிலையைப் பேண முயற்சித்தனர்
- வாழ்வின் ஏற்றத்தாழ்வுகளைச் சமமான மனநிலையுடன் ஏற்றுக்கொண்டனர்

நமது இலக்கியங்கள் நமக்குக் கூறும் உளவியல் நுண் கருத்துக்கள் பலப்பல. இத்தகைய வேறு பல நுண் பரிமாணங்களை காண இது போன்ற கட்டுரைகள் வாய்ப்பாக அமையும்.

**அடிக்குறிப்புகள்**

1. Parameswaran, E. G., and C. Beena. *An Invitation to Psychology*. Neelkamal Publications, 2023.
2. சாமிநாதையர், உ. வே. *புறநானூறு: மூலமும் பழைய உரையும்*. டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம், 1971.
3. சுஜாதா. *புறநானூறு: ஓர் எளிய அறிமுகம்*. உயிர்மை பதிப்பகம்.
4. துரைசாமி பிள்ளை, ஔவை. *புறநானூறு: மூலமும் விளக்க உரையும்*. பூம்புகார் பதிப்பகம்.
5. பாப்பையா, சாலமன். *புறநானூறு: புதிய வரிசை வகை*. கவிதா பப்ளிகேஷன், 2019.
6. *புறநானூறு* (பாடல்கள் 356-367). [Publisher], [Year].

**எழுத்தாளர் பிரகடனம் - முரண்பாடுகள் அறிக்கை (Author Declaration - Conflict of Interest Statement)**

இவ்வாய்வுக் கட்டுரையின் உள்ளடக்கத்திலோ, தரவுப் பகுப்பாய்விலோ அல்லது அதன் முடிவுகளிலோ எந்தவிதமான நிதி சார்ந்த அல்லது தனிப்பட்ட முரண்பாடுகளும் (No Conflict of Interest) இல்லை என்று இதன் முதன்மை எழுத்தாளர் உறுதிபடப் பிரகடனம் செய்கிறார். இக்கட்டுரை முற்றிலும் கல்வி மற்றும் சமூக மேம்பாட்டு ஆராய்ச்சிக்காக மட்டுமே நடுநிலைமையோடு எழுதப்பட்டுள்ளது.